1970 செப்டம்பர் 8]

அணுப் பொருள் உற்பத்தித் தொழில் வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய வழிவகைகளைப்பற்றி விவாதிப்பதற்காக குறித்த காலத்திற் கொருமுறை அது கூட்டங்கள் நடத்தியது. இச்செயற்குழு தனது அறிக்கையை முடிக்கும் தறுவாயில் உள்ளது. அவ்வறிக்கை விரைவில் அரசிற்கு அனுப்பப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கோயம்புத்தூரில் சிறுதொழில்கள் பொருட்காட்சி

* 302 வினா.—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரத்தில் சிறு தொழில்களின் நிலையான பொருட்காட்சி ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ மாதவன்: இல்லை.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, சிறு தொழில் நிலையத்தின் சார்பாக கோவை நகரிலே பொருட்காட்சி அமைக்கப்படுமே யானால் வருகின்ற பொதுமக்கள் பொருட்காட்சியைப் பார்க்கவும், அரசாங் கத்திலே உற்பத்தி செய்யப்படுகிற பொருள்களை வியாபாரம் செய்வதற்கும் வசதியாக இருக்கும். எனவே, அரசாங்கம் அதைத் தொடங்குவதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறு தொழில்களிலே உற்பத்தியாகின்ற பொருட்கள் விற்பனையாவதற்கு வசதிசெய்யும்வண்ணம் இப்படிப்பட்ட கண்காட்சிகள் அமைக்கப்படவேண்டுமென்பதைக் கொள்கையளவிலே நம்முடைய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. சில இடங்களிலே இதற்கான வசதிகளுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது. கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நாம் பரிசீலித்து எந்த இடத்திலே என்ன என்ன முறை யிலே அமைத்தால் பயனுள்ளதாக இருக்கும் என்பதைப்பற்றி முடிவு எடுக்கலாம்.

திரு. எம். பூபதி: தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் ஏற்படுத்தப் பட்டிருக்கிற சிறு தொழில்களிலே என்ன என்ன பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன? அந்தத் தொழிற்சாலைகள் லாபகரமாக நடைபெறுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பெரிய கேள்வியாகப் போடுகிறார்கள். ஆயிரக்கணக்கான பேர்கள் தொழில் நடத்துகிறார்கள். யார் யார் என்ன தொழில்கள் நடத்துகிறார்கள் என்று விவரம் இல்லை. ஒவ்வொருவருடைய லாபநஷ்டம் கணக்கு நமக்கு வருவதில்லை. குறிப்பாக, தொழில்களைப்பற்றி பொதுமக்களுடைய நன்மையைக் கருதி கனம் அங்கத்தினர் அவர்கள் சொன் னால் அதை அரசாங்கம் பரிசீலிக்கலாம்.

திருப்பூரில் நொய்யலாற்றின் குறுக்கேயுள்ள அணையை உயர்த்துதல்

* 303 வினா.—திரு. சு. துரைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—